1971 டிசம்பர் 14]

செட் அமைத்தல், உழவு மாடுகள் வாங்குதல் போன்ற காரியங்களுக்கு அந்தப் பகுதியிலுள்ள விவசாய மக்களால் இத்தொகை செலவிடப்படுகிறது.

திரு. அ. ப. சண்முகசுந்தரம்: தலைவர் அவர்களே, 18 கிராமங்கள் கிராமதானமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதில் எத்தனை ஏக்கர் நிலம் தானமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நிலமில்லாத எத்தனை விவசாயிகளுக்கு நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு அளிக்கப்படும் நிதி உதவிகள் சரியாகச் செயல் பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, பதினெட்டு கிராமங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. நிலத்தின் மொத்தப் பரப்பளவு 1,309.14 ஏக்கரும், அதன் மதிப்பு 17,23,613 ரூபாயும் ஆகும். இதற்கு வழங்கப்பட்ட கடன்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதியின்பேரில் ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் மூலமாக அந்த விவசாயிகளுக்குச் சேர்க்கப் படுகிறது.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திற்கு மட்டும் பதினெட்டு கிராமங்கள் கிராமதானமாகக் கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். அது எந்தெந்தக் கிராமங்கள்? மற்ற மாவட்டங்களில் கிராமதானத்திற்கு நிலம் வழங்கப்படவில்லையா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் மேலூர், உசிலம்பட்டி, நிலக்கோட்டை ஆகிய வட்டங்களில் 18 கிராமங்கள் கிராமதானமாகக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. மற்ற மாவட்டங்களைப் பொறுத்த விவரம் தேவையானால், தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிவிப்பு

(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1971).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.